10/=


பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 244 செவ்வாய்க்கிழமை ஜனவரி 23 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



# தமிழரை அழிக்கவே திணைக்களங்கள் உருவாக்கம்

## உண்மையைப் போட்டுடைத்தார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜனவரி 23

திட்டமிட்டு தமிழ் மக்களின் இருப்பை, நிலங்களை, தொழில்களைச் சூறையாட தென்னவர்கள் கங்கணம் கட்டி நிற்பதாக எமக்குப் புலப்படுகிறது. அவர்கள் தமக்கு உதவுவதற்காகப் பல திணைக்களங்களை எம் மத்தியில் உலவ விட்டு தமது காரியங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். எமது தாய் தந்தையர் அதன் பின் நாம் என காலாதி காலமாகக் கூடி மகிழ்ந்து குலவிய நில புலங்களை வன இலாகா, வனவிலங்கு திணைக்களம், தொல்பொருள் ஆராய்ச்சி, கனிய வளம், பறவைகள் சரணாலயம், கடற்கரையோர பாதுகாப்பு என்று பல்வேறு திணைக்களங்கள் மூலம் தினமும் கையகப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலைமைகளில் இருந்து நாம் எமது மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் இவ் வகையான தவறான நடவடிக்கைகளை துணிந்து எதிர்ப்பதற்கும் – எடுத்துக் 06▶

## தபால் வாக்களிப்பு நேற்று ஆரம்பம்



கொழும்பு, ஜன.23

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணத்திலும் நேற்றுக்காலை தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றுள்ளது. யாழ். மாவட்டத்தில் 468,476 பேர் வாக்களிப்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். இவர்களில் தபால் மூலம் வாக்களிக்க 17,273 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை அடுத்த கட்ட தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தபால் வாக்கு முடிவு தனியாக வெளியாகாது

கொழும்பு, ஜன.23

இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்புக்கள் குறித்த பெறுபேறுகள் தனியாக வெளியிடப்படமாட்டாது என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மூஹமட் தெரிவித்தார்.

"இதற்கமைவாக வாக்களிப்பு மத்திய நிலையம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட பிரதேசத்தில் முதன்மையாக கொண்ட இடத்தை காண, வாக்களிப்பு மத்திய நிலையத்தில் தபால் மூல வாக்குகள் எண்ணப்படும்.

இதன்போது அந்தத் தொகுதிக்கு உட்பட்ட தேர்தல் பெறுபேறுக்கு அமைவாக தபால் மூல வாக்குகள் ஒன்றுசேர்க்கப்படும்", என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பு நேற்று ஆரம்பமான நிலையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். 06▶



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவை சேனாதிராஜா எம்.பி. விஞ்ஞாபனத்தை வெளியிட த. சித்தார்த்தன் எம்.பி. அதனைப் பெற்றபோது...

## தேர்தலுக்குப் பின்னர் பெரும் கட்சித் தாவல்

கொழும்பு,ஜன.23

தேர்தல் முடிந்ததும் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு பெரும் எண்ணிக்கையானோர் மகிந்த தரப்பில் இருந்து மைத்திரி தரப்புக்குத் தாவவுள்ளனர் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

"கிராம மட்டத்தில் எமது கட்சி பலமாகவே இருக்கின்றது. அவர்கள் வேறு கட்சிகளின் கூட்டங்களுக்கு- ஊர்வலங்களுக்குச்- சென்றாலும்கூட எம்மை விட்டுச் செல்லவில்லை. தேர்தல் என்ற ஒன்று வரும்போது அவர்கள் சுதந்திரக் கட்சிக்கே வாக்களிப்பர். அதுதான் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நடக்கும். மகிந்தவின் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் போட்டியில்லை சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில்தான் போட்டி நிலவுகிறது. மகிந்த தரப்பினர் 06▶

## மண் எண்ணெய் விற்கத் தடை!

கொழும்பு, ஜன.23

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், பவுஸர்களுக்கும் சிவப்பு நிறத்திலான, இலங்கை மண் எண்ணெய்யை மொத்தமாக விநியோகிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தடைசெய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள நிரப்பு நிலையங்களுக்கும் இது தொடர்பான உத்தரவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பிறப்பித்துள்ளது.

மண் எண்ணெய், இலங்கை மண் எண்ணை மற்றும் கைத்தொழில் மண் 06▶

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 வருட கடூழியச் சிறை


யாழ்ப்பாணம், ஜன.23

பூநகரி, நாச்சிக்குடா வலைப்பாடு என்ற இடத்தில் 12 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி பூநகரி பொலிஸ் பிரிவுக் 06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்



பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.




SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.



# சீனத் தூதுவர் வந்தார்

கொழும்பு, ஜன.23

இலங்கைக்கான புதிய சீனத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள செங் சுவேயுவான் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார். அவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், சீன-இலங்கை நட்புறவுச் சங்கப் பிரதிநிதிகள், சீன தொழிற்துறை மற்றும் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

இலங்கைக்கான சீனாவின் 21 ஆவது தூதுவராக செங் சுவேயுவான் பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவராகப் பணியாற்றிய ஷி ஷியாங்லியாங் அண்மையில் தமது பணிக்காலம் முடிந்து நாடு திரும்பியதை அடுத்து, புதிய தூதுவராக செங் சுவேயுவான் பொறுப்பேற்கவுள்ளார்.

தாம் இலங்கை - சீன உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கும், பிராந்தியத்தில் அமைதி, உறுதிப்பாடு, செழிப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையிலும், பணியாற்றப் போவதாகவும் செங் சுவேயுவான் தெரிவித்துள்ளார். (அ)

# முன்பள்ளி திறப்பு

வடமராட்சி, ஜன.23

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட, 66 லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட வதிரி முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தை, பிரதேச சபை செயலாளர் விஜேராஜ், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோக்குமார் ஆகியோர் நேற்று முன் தினம் திறந்து வைத்தனர் (அ-11)



# அந்த 2 கோடி ரூபாவும் அபிவிருத்தி நிதியே!

## சிவசக்தி ஆனந்தனுக்கு சித்தார்த்தன் மறுப்பு



வவுனியா,ஜன.23

"மாவட்ட அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படும் நிதி குறித்து சிலர் பொய்யான பரப்புரை செய்கின்றார்கள்.பட்ஜெட்டுக்கு வாக்களிப்பதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 2 கோடிரூபா வழங்கப்பட்டதாக அண்மையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றம் சாட்டியிருந்தார். அதற்கே இவ்வாறு பதிலளித்துள்ளார் சித்தார்த்தன்.

வவுனியா திருநாவற்குளத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் எஸ்.காண்டீபனின் தேர்தல் அலுவலகம் நேற்று முன் தினம் மாலை 4.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

"இடைக்கால அறிக்கையை பற்றி இப்போது பேசப்படுகின்றது அது வெறும் இடைக்கால அறிக்கை மட்டுமே, மாறாக இறுதி அறிக்கை அல்ல! அது முழுமையடையும்போதுதான் நாங்கள் அதை ஏற்றுக் கொள்வதா? நிராகரிப்பதா? என்பதனை முடிவெடுக்க முடியும்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வருவதற்கு எண்பது வீதமான தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விவகாரங்களில் அரசு மெத்தனமாக இருந்தாலும், தமிழ் மக்களின் எதிர்கால நன்மை கருதி, நாங்கள்பொறுமை காக்கின்றோம். அரசினால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது' ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை!

பட்ஜெட்டுக்கு வாக்களிப்பதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கபட்ட நிதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வன்னி மக்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருடாக வரும் அபிவிருத்தியை இழந்துள்ளார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அந்தந்த மாவட்ட அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படும் நிதியானது, மாவட்ட அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இது அனைவருக்கும் தெரியும். இதனைத் திரித்து சிலர் பொய்யாகப் பரப்புரை செய்கின்றனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அரசிடமிருந்து பிரத்தியேகமாக நிதியைப் பெற்று, அபிவிருத்தி வேலைகளைச் செய்திருந்தார்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# அடையாள அட்டைக்கான சுற்றறிக்கை அனுப்பல்



கொழும்பு, ஜன.23

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான சுற்றறிக்கை இந்த வாரத்துக்குள் அனைத்து பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என ஆட்பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்பதிவுத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானா குணதிலக்க தெரிவித்துள்ளார். (அ)

# ரணிலைப் பதவி நீக்குக! மைத்திரிக்கு கோரிக்கை

கொழும்பு,ஜன.23

"இது நல்லாட்சி என்றால் சிங்கப்பூரில் ஒழிந்திருக்கும் அர்ஜூன மகேந்திரனைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கும் பிரதமரை பதவி நீக்குவதற்கும் ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மகிந்த அணியைச் சேர்ந்த காஞ்சன விஜயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

"மகிந்தவின் ஒன்பது வருட ஆட்சியில் இந்த நாடு பெரும் மாற்றங்களைக் கண்டது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாடு நல்லதொரு நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலையில்தான் எமது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. புதிய அரசு உருவாகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

இந்த மூன்று வருடங்களுக்குள் நாட்டின் எல்லாத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரம் வளரும். எல்லோர் கைகளிலும் பணம் புரளும் என்கிற கருத்துத்தான் இது வரை காலமும் இருந்து வந்தது. அது இப்போது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.



பொருளாதார வளர்ச்சி 7 வீதத்தில் இருந்து 4 வீதத்துக்கு கீழிறங்கியுள்ளது. பணவீக்கம் 3.35 வீதத்தில் இருந்து 8.6 வீதத்தால் அதிகரித்துள்ளது. வேலையின்மை 4.3 வீதத்தில் இருந்து 4.5 வீதத்தால் அதிகரித்துள்ளது. தனிநபர் கடன் 3 லட்சத்து 53 ஆயிரத்து 361 ரூபாவிலிருந்து 4 லட்சத்து 79 ஆயிரத்து 361 ரூபா வரை அதிகரித்துள்ளது. அரச கடன் 7391 பில்லியன் ரூபாவில் இருந்து 10163 வரை அதிகரித்துள்ளது.

இந்த நிலைமைக்கு பிணை முறி மோசடிதான் காரணம். இந்த மோசடிக்கு காரணமான அர்ஜூன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தமைக்கு முழு அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும். மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிரான அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் பணம் வழங்கியவர் இவர்தானா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனால்தான் எல்லோரும் இவரைப் பாதுகாக்கின்றனரா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பல அரசியல் கட்சிகளுக்கு அதிகளவிலான பணம் விநியோகிக்கப்பட்டது.

பிணை முறி மோசடி தொடர்பிலும் ஏனைய ஊழல்கள் தொடர்பிலும் நாம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் சி.ஐ.டி இலும் முறைப்பாடு செய்தோம். ஆனால், இது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது நல்லாட்சி என்றால் சிங்கப்பூரில் ஒழிந்திருக்கும் அர்ஜூன மகேந்திரனை கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கும் பிரதமரை பதவி நீக்குவதற்கும் ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் காஞ்சன விஜயசேகர எம்.பி. கூறியுள்ளார். (அ)

# ஒரு தடவைதான் பார்த்தேன்



மத்திய வங்கி பிணை முறி மோசடியின் கதாநாயகனான அர்ஜூன அலோசியஸ் யாருடன் எல்லாம் தொடர்பு வைத்துள்ளார் என்ற தகவல் தினமும் வெளியாகிக்கொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி என எல்லா ஆசியல்வாதிகளுடனும் அவர் தொடர்பைப் பேணி வருகின்றார். யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு தனது மோசடித் தொழிலை அவர் வெற்றிகரமாகவே செய்து வந்திருக்கிறார்.

இந்த அரசில் பிரதமர், ரவி கருணாநாயக்க எனப் பெரிய பெரிய தலைகளுடன் தொடர்பு வைத்துள்ளதுபோல் முந்தைய அரசில், நாமல் ராஜபக்ச போன்ற தலைகளுடன் அவர் தொடர்பை வைத்திருந்தார்.

அந்த அடிப்படையில் அமைச்சர் டிலான் பெரேராவுடனும் அவர் தொடர்பை வைத்துள்ளார் என்று யாரோ கதையைக் கிளப்பிவிட்டனர். பயந்துபோன அமைச்சர் உடனே அதை மறுத்ததோடு வாழ்க்கையில் ஒரே ஒரு தடவைதான் அலோசியஸைக் கண்டதாகக் கூறியுள்ளார்.

அதுவும் மகிதவின் ஆட்சியில் நாமலைச் சந்திப்பதற்காக அலோசியஸ் அலரி மாளிகைக்கு வந்திருந்தபோதுதான் கண்டாராம்.

அலோசியஸூக்கும் நாமலுக்கும் இடையில் தொடர்பு இருந்தது என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டார் டிலான்.



எதிரொலி
Ethiroli
செவ்வாய், 23 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## வாங்கினார்களா? வாங்கவில்லையா?

சிவசக்தி ஆனந்தன் கொளுத்திப் போட்ட, "2 கோடி ரூபா" மிகப் பெரிதான அதிர்வலைகளை தமிழ் அரசியல் பரப்பில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஒன்றுக்கு இரண்டு தடவைகள் பொதுவெளியில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது, 'பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக அரசிடம் இருந்து தலா 2 கோடி ரூபாவைப் பெற்றனர். நான் அதை வாங்கவில்லை. அதனால் எதிர்த்து வாக்களித்தேன்" எனக் குற்றம் சாட்டியுள்ளார் சிவசக்தி ஆனந்தன்.

கூட்டமைப்பில் இருந்து, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு வெளியேறிய சூழலிலேயே அந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், கூட்டமைப்பின் மீது இப்படியான பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஆனால் அதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், தன் சக உறுப்பினர்கள் மீது இப்படிப் பாரதூரமான குற்றச்சாட்டை, தன் கற்பனையில் எடுத்து விட்டிருக்க முடியாது. ஏனெனில் இந்தக் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றம் வரை கூட குற்றம் சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் போக முடியும். அதிலும் 2 கோடி ரூபா வாங்கியதாகச் சொல்லப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுள், இலங்கையின் முதன்மையான சட்டத்தரணி ஒருவரும் உள்ளடக்கம். எனவே அப்படித் தங்கள் மீது சிவசக்தி ஆனந்தன், அபாண்டமான ஒரு குற்றச்சாட்டை, அதுவும் உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் சுமத்தியமைக்கு நீதிமன்றக் கூண்டில் ஏற்றி, ஒரு கை பார்த்திருக்க வேண்டும். ஆனால் அநியாயத்துக்கு அப்படி ஏதும் செய்யாமல் கூட்டமைப்பு சாதுவாக இருக்கிறது.

கிளிநொச்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மட்டும், 'அப்படி நாங்கள் 2 கோடி வாங்கவே இல்லை. அப்படி நாங்கள் வாங்கியதற்கு ஆதாரம் காட்ட முடியுமா?' என்று சவால் விட்டுள்ளார். அவர் சும்மா அந்த விவகாரத்தை மறுத்திருந்தால் யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது. ஆனால் ஆதாரம் காட்டமுடியுமா? என்று விட்டார் பாருங்கள் ஒரு வார்த்தை, அந்த வார்த்தை தான். 'ஒருவேளை சிவசக்தி ஆனந்தன் சொன்னது போல 2 கோடி வாங்கியிருப்பார்களோ' என்று சந்தேகிக்க வைக்கிறது. ஏனென்றால், மலையகத் தமிழர்களை இழிவாகப் பேசியமை, ஊடகவியலாளர் ஒருவரை மிரட்டியமை, அரச குழுவோடு பிரஸ்லஸ்க்குச் சென்று அரசுக்கு ஆதரவாகக் கதைத்தமை, பெமிற் வாகனத்தை இன்னொருவருக்கு விற்றமை என்பன போன்ற விடயங்களில் இப்படித்தான் சிறீதரன் ஆதாரம் கேட்டு, வாங்கிக் கட்டியிருந்தார். அவர் ஆதாரம் கேட்ட அத்தனை விடயங்களிலும் அவருக்கு எதிராக, வலுவான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டபோது, ஏதேதோ சாட்டுக்களைச் சொல்லி அவர் பின்னர் நழுவியிருந்தார். அதேபாணியில் இப்போது 2 கோடி ரூபா விடயத்திலும் ஆதாரத்தை அவர் கேட்டுள்ளார் போலும்.

2 கோடி ரூபா வாங்கவில்லை என சிறீதரன் மறுக்க, அவர் சார்ந்த தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை. சேனாதிராசாவோ 'அந்த 2 கோடி ரூபா மாவட்ட அபிவிருத்திக்காக வழங்கப்பட்டது' என்று கூறி, எந்தெந்த அமைப்புகளுக்கு அந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது என்ற விபரத்தை வெளியிட்டுள்ளார். ஆக, ஒரே கட்சியைச் சேர்ந்த இரு எம்.பிக்களுக்கிடையில் கூட, 2 கோடி ரூபா வாங்கப்பட்ட விவகாரத்தில் இருவேறு நிலைப்பாடுகள். இந்த இருவருமாவது பரவாயில்லை, ஏனைய எம்.பிக்கள், இப்படி ஒரு விவகாரம் விஸ்வரூபமெடுத்து நிற்பதே தெரியாதது போல பம்மிக்கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் மீது உண்மையிலேயே தவறில்லாவிட்டால், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தனின் குற்றச்சாட்டை எதிர்கொண்டு, அவர் சொன்னது அப்பட்டமான பொய் என்பதை நிரூபிக்க வேண்டும். தங்கள் மீது தவறில்லாவிட்டால் நிச்சயம் அப்படிச் செய்வார்கள். செய்வார்களா?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

### தேர்தல் முடிவடையும் வரை

# கைதாவோருக்கு பிணை இல்லை!



யாழ்ப்பாணம், ஜன. 23

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டுக் கைதாவோருக்கு தேர்தல் முடிவடையும் வரை பிணை வழங்கப்படாது என எச்சரித்துள்ளார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

54 கிலோ கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரின் பிணை விண்ணப்பம் நேற்று மன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போது அவரின் விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி, மேற்சொன்ன எச்சரிக்கையையும் விடுத்திருந்தார்.

"தேர்தல் காலத்தில் கொலை, கொள்ளை, வாள்வெட்டு போன்ற சமூக விரோத குற்றங்களுக்கு பிணை வழங்குவது, தேர்தல் கால வன்முறைகளை அதிகரித்து விடும். எனவே பாரதூரமான எந்த குற்றத்திற்கும் தேர்தல் முடியும் வரை பிணை வழங்கப்படாது. அது வேட்பாளராக இருந்தலும் சரி, வாக்காளராக இருந்தாலும் சரி பிணை வழங்கப்படாது.

யாழ். மாவட்டத்தில் பாரதூரமான தேர்தல் வன்முறைகள் பதியப்படாத போதும் ஒரு சில வாள்வெட்டு, கொலை, கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பொலிஸார் தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கு ஒத்துழைக்கும் வகையிலும், தேர்தல் ஆணையகம் நீதியான ஜனநாயக தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைக்கும் வகையிலும் நீதிமன்றங்கள் செயற்பட வேண்டும். அந்த வகையில் யாழ் .மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பாரதுரமான குற்றங்களைப் புரிவோருக்கு பிணை வழங்கப் படமாட்டாது.

மேலும், அது தொடர்பான அனைத்து வழக்குகளும் யாழ். மேல் நீதிமன்றில் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் நீதிபதி இளஞ்செழியன் குறிப்பிட்டுள்ளார். (ச)

## சிங்கப்பூர் பிரதமர் கொழும்பு வந்தார்



கொழும்பு, ஜன. 23

சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங் மூன்று நாள் பயணமாக நேற்று இலங்கை வந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் அழைப்பை ஏற்றே அவர் இலங்கை வந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துப் பேசும் அவர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாகவும் உரையாடவுள்ளார்.

## அன்னப் பட்சிகள் போன்று தமிழ் மக்கள் செயற்படுவர்

### சீ.வீ.கே. சிவஞானம் நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 23

அன்னப் பட்சிகள் போன்றே தமிழ் மக்களும் செயற்படுவார்கள் என நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார் வட மாகாண சபை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

யாழ். மாநகர சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடந்தது. இதற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களுக்கு வாக்களித்தவர்கள் எங்களை விட்டுவிட்டுச் செல்லுமாறு கேட்கவில்லை. ஆனால் எங்களுக்கு வாக்குப் போடாதவர்களும், ஆதரிக்காதவர்களும், விமர்சித்தவர்களுமே எங்களை விட்டுவிட்டு போகச் சொல்கின்றனர். எங்களை விட்டு விட்டு போகச் சொல்பவர்கள் தாங்கள் என்ன செய்யப் போகின்றனர். அவ்வாறு எப்படி, எங்கே, என்ன செய்ய முடியுமென்று கூறட்டும். அதுவே ஆரோக்கியமானதாக இருக்கும்.

அதனைவிடுத்து கட்சித் தலைவரையும் கட்சியின் உறுப்பினர்களையும் கட்சியையும் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. தேவையில்லாதவற்றைப் பேசி எமது மக்களையும் எம்மையும் குழப்பி வருகின்றனர். ஆகவே தான் நாம் எமது மக்களுக்கு உண்மையை எடுத்தக் கூறுகின்றோம். எங்கள் கட்சி இதுவரை காலத்தில் ஏமாற்றிச் செயற்பட்டது கிடையாது. ஆகவே மக்களும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அன்னப் பட்சி தண்ணீரை விடுத்து பாலை மட்டும் குடிப்பது போல், தமிழ் மக்களும் எமது வேட்பாளர்களை மட்டும் தெரிவு செய்து வெற்றியைத் தருவார்கள் - என்றார்.

## அந்தநாள் ஞாபகம்



**23.01.1897**

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், அரசியல்வாதியுமான சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினம்.

## ஏ.ஈ. மனோகர் காலமானார்



யாழ்ப்பாணம், ஜன. 23

ஈழத்தின் பிரபல பொப்பிசைப் பாடகர் ஏ.ஈ.மனோகர் நேற்றிரவு 7.30 மணியளவில் காலமானார்.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஏ.ஈ. மனோகர் 1970 களில் வெளியிட்ட "சின்ன மாமியே உன் சின்ன மகள் எங்கே", "சுராங்கனி... சுராங்கனி... மாலுகனவா..." போன்ற பாடல்கள் மூலம் பிரபலமானவர்.

தமிழ், சிங்கள மொழிகளில் பொப்பிசைப் பாடல்களை வெளியிட்ட அவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட படங்களிலும் நடித்திருந்தார்.

1980 களின் பின்னர் தென்னிந்தியா சென்றவர், சில படங்களில் நடித்ததுடன் பாடல்களையும் பாடியுள்ளார். அங்கு பல மேடைகளில் இசை நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்று நாளும் கோளும்

23.01.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 10 ஆம் நாள்
ஷஷ்டி பி.ப. 01.11 மணி வரை | ரேவதி மு.ப. 05.14 வரை | குளிகை 12.00-01.30
இராகுகாலம் 03.00 - 04.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அன்பு | விவேகம் | போட்டி | பொறுமை | மேன்மை | விருத்தி | அனுகூலம் | அசதி | ஆதரவு | ஆக்கம் | நன்மை | தொல்லை |

# கடந்த வருட விபத்துக்களில் 3,078 பேர் பலி




கொழும்பு, ஜன.23

2017ம் ஆண்டில் 2910 வாகன விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அவற்றில் 3078 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

"குறித்த விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். அவ்வாறு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 998 ஆகும். அதேவேளை விபத்துக்களில் 935 பாதசாரிகளும் பலியாகியுள்ளனர்.

இதேவேளை வீதி விபத்து காரணமாக நாளொன்றுக்கு 10 பேர் வீதம் உயிரிழக்கின்றனர். மேலும் 20 பேர் அங்கவீனர்களாகி வருகின்றனர்.

2017ம் ஆண்டில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பாதசாரிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை இவ்வாறு அதிகரித்தமைக்கு, கவனயீனமான செலுத்துகை, கூடுதல் வேகம், வீதி சமிக்ஞைகள் தொடர்பில் கவனமின்மை போன்றவையே காரணம்" என வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)



# சுற்றுலாத்துறையில் வில்பத்து சாதனை

கொழும்பு, ஜன.23

வில்பத்து தேசிய வனத்தை பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகள் மூலம் கடந்த வருடம், 5 கோடியே 76 இலட்சத்து 50 ஆயிரத்து 34 ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக வனத்தின் பொறுப்பாளரான சமல் லக்ஷ்மன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் நிலவிய கடும் வறட்சியையும் பொருட்படுத்தாது 49 ஆயிரத்து 114 உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், 26 ஆயிரத்து 612 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் வில்பத்துக்கு வந்துள்ளனர்.

இந்த நிலைமையில், கடந்த ஜூலை மாதம் மாத்திரம் ஒரு கோடியே 21 இலட்சத்து 31 ஆயிரத்து 219 ரூபா வருமானம் கிடைத்ததாகவும் சமல் லக்ஷ்மன் பெரேரா கூறியுள்ளார்.

கடந்த வருடம் கிடைத்த இந்த வருமானமானது இது வரை கிடைத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது ஒரு சாதனையே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# டொல்பின் கரையொதுங்கியது



கொழும்பு, ஜன.23

புத்தளம், கற்பிட்டி கடற்கரையில் பெரியளவிலான டொல்பின் மீன் ஒன்றின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது. நேற்று அதிகாலையே குறித்த மீனின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த டொல்பின் 10 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டுள்ளதெனக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுறா இனத்தை சேர்ந்த இந்த டொல்பின் மீன், சாதாரண டொல்பின் மீன்களை விடவும் புத்தி கூர்மையானதென தெரிவிக்கப்படுகின்றது. பெரும் அலைகளில் சிக்கிய டொல்பின், கரையொதுங்கி இருக்கலாம் எனவும், விஷத் தன்மை காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# நடமாடும் வாகனச் சேவையில் அத்தியாவசியப் பொருட்கள்

கொழும்பு, ஜன. 23

அத்தியாவசியப் பொருட்களை நிவாரண விலையில் வழங்குவதற்காக நடமாடும் வாகனச் சேவையை, நாடு முழுவதிலும் மேற்கொள்ளவு ள்ளதாக, கூட்டுறவு மொத்த வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் றிஸ்வான் ஹமீட் தெரிவித்துள்ளார்.

"பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் நோக்கிலேயே, மேற்படி நடமாடும் வாகனச் சேவையை, நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 700 வாராந்தச் சந்தைகளை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டம் சிவில் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும். எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 100 நடமாடும் வாகனச் சேவையை நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தவுள்ளோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

# கதிர்காமக் கலவரம் 58 பேருக்குப் பிணை



கொழும்பு, ஜன.23

கதிர்காமத்தில் பொலிஸ் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபரொருவர் பலியாகியதால், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி கைதான 58 பேர் கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திஸ்ஸமஹாராம நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். சூட்டுச் சம்பவத்தையடுத்து கதிர்காமம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. இதனால் மேலும் பொலிஸ் விசேட பிரிவினர் குறித்த பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (அ)

# கடனைக் குறைத்தது நானே!



கொழும்பு, ஜன.23

103 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக்கடனை 70 சதவீதமாகத்தானே குறைத்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதியாக நான் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டபோது, வெளிநாட்டுக் கடன்களின் அளவு தற்போதைய வெளிநாட்டுக் கடன்களின் அளவை விட அதிகமாகக் காணப்பட்டது. என்னுடைய ஆட்சிக்காலத்தில் நூற்றுக்கு 103 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடனை தற்போதைய அரசு ஆட்சிக்கு வரும் போது நூற்றுக்கு 70 சதவீதமாக, நான் குறைத்திருந்தேன்" என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# நீதிபதியின் வாகனம் குடித்தது பெண் உயிரை

கொழும்பு, ஜன.23

அனுராதபுரம் - வாரியபொல பிரதான வீதியின் மினுவாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தாய் உயிரிழந்துள்ளார். விபத்தினை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் நீதிபதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட முன்னாள் நீதிபதி ஜயபிரேம பீ. தென்னகோன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த முன்னாள் நீதிபதி செலுத்திய வாகனத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 35 வயதுடைய தாய் ஒருவரே மோதுண்டு உயிரிழந்துள்ளார். அவரது 12 வயது மகள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



# பிணைமுறி அறிக்கை நாடாளுமன்றில் இன்று

கொழும்பு, ஜன.23

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பாரிய ஊழல், மோசடி தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகள், நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படும் என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பான அறிக்கை குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கட்சித் தலைவர்களுடனான சந்திப்பு, நேற்றுக் காலை, சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. (அ)

# அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.23

தென்மராட்சியின் தனங்கிளப்பு, மறவன் புலவு மற்றும் சரசாலைப் பகுதிகளில் விவசாயிகள் நெல் அறுவடையை ஆரம்பித்து உள்ளனர்.

நெல்லை அறுவடை செய்ய உகந்த வகையில் வீதி ஓரமாக வயல்களில் இயந்திரங்கள் மூலமும், இயந்திரங்களை கொண்டு செல்ல முடியாத நிலையில் நடுப்பகுதியில் உள்ள வயல்களில் , மனித வலுக் கொண்டும் அறுவடை செய்வதனை அவதானிக்க முடிகிறது.

நெல் விதைப்புக் காலத்தில் மழை இல்லாத போதிலும் பின்னர் பெய்த பெரு மழை காரணமாக சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். தற்போதும் சில வயல்களில் தண்ணீர் காணப்படுவதால் அறுவடையை சில விவசாயிகள் தள்ளிப் போடுவதாகவும், இருப்பினும் சகல பகுதிகளிலும் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அறுவடை முடிந்துவிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# சுதந்திரக் கட்சிக் கூட்டத்துக்கு மகிந்த அணிக்கும் அழைப்பு

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தகவல்



கொழும்பு,ஜன.23

"தேசிய அரசில் தொடர்ந்தும் இருப்பதா இல்லையா என்று இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு மகிந்த அணிக்கும் அழைப்பு விடுக்கப்படும்" என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

"பிணை முறி மோசடியால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யும்பொருட்டு அந்தப் பணத்தை மீளப்பெறுவதற்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம். ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்துள்ள போதிலும் நாட்டுக்கு விரோதமான செயல்களில் அந்தக் கட்சி ஈடுபட்டால் அதை நாம் எதிர்க்கவே செய்கிறோம்.

ஜே.வி.பி.யுடன் இணைந்து ஆட்சி அமைத்தபோதும் சரி, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளபோதிலும் சரி சுதந்திரக் கட்சியின் தனித்துவத்தை

நாம் விட்டுக்கொடுக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்தமைக்கான காரணத்தை நாம் கண்டறிந்தோம்.

மகிந்த தோல்வியடைவதற்கு காரணமான பஸில் ராஜபக்சதான். மகிந்த தோல்வியடைந்ததும் நாட்டைவிட்டு பஸில் தப்பியோடினார். அவர் இல்லாமல் நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்கொண்டதால்தான் அதிகளவிலான ஆசனங்களைச் சுதந்திரக் கட்சியால் பெற முடிந்தது. பணம் செலவழிக்காமல் தேர்தலில் போட்டியிட முடிந்தது.

அன்று தேர்தலில் வெற்றிகொள்வதற்கு பணம், பொருட்களை செலவிட்டோம். இப்போது அந்த நிலையில் இருந்து மீண்டுவிட்டோம். நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் சகோதரர் வாகன விபத்தை ஏற்படுத்தியதால் அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். இப்படியான -அனைவருக்கும்- பொதுவான சட்டம்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. யார் பிழை செய்தாலும் அவர்கள் யாரென்று பார்க்காமல் தண்டிக்கும் நிலைதான் இப்போது உள்ளது. அதுபோல்தான் பிணை முறி மோசடி விவகாரமும் கையாளப்படும். பிணைமுறி மோசடியால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யும்பொருட்டு அந்தப் பணத்தை மீளப்பெறுவதற்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

தேசிய அரசில் சுதந்திரக் கட்சி இணைவது தொடர்பான தீர்மானத்தை முழு சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்தே மேற்கொண்டது. மஹிந்த தரப்பில் குமார் வெல்கமவைத் தவிர அனைவரும் இதற்கு இணக்கம் தெரிவித்தனர். அதேபோல், இந்த அரசில் இனி இருப்பதா இல்லையா என்ற முடிவைக்கூட சேர்ந்தே எடுப்போம். தனித்து அல்ல.

அந்த முடிவை எடுப்பதற்காக தேர்தல் முடிந்து சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடும். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு மஹிகிந்த அணிக்கும் அழைப்புவிடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# மீன்வாடி எரிந்து நாசம்

மன்னார், ஜன.23

மன்னார் பள்ளிமுனைக் கடற்கரையில் அமைந்துள்ள மீன் வாடி ஒன்று தீயில் எரிந்தமையால் சுமார் எட்டரை இட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாகின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமைஇரவு 11 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனை பகுதி கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ள மீன் வாடி ஒன்று இரவு 11 மணியளவில் தீப்பற்றி எரிவதை அங்குள்ளவர்கள் கண்டனர். அவர்கள் தீயை அணைக்க் முற்பட்டபோதும், அது பயணிக்காமையால், குறித்த வாடி முற்றாக எரிந்தது.

இருந்தபோதும் அயல் மீன்வாடிகள் தீ பரவாமல் பாதுகாக்கப்பட்டன. தீ விபத்தில் குறித்த மீன்வாடிக்குள் இருந்த 15 குதிரை வலு மற்றும் 25 குதிரை வலுக்கொண்ட இரு வெளிக்கள இயந்திரங்கள், வலைகள், மீன்பிடி உபகரணங்கள் உட்பட சுமார் எட்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின என, பாதிக்கப்பட்ட மீனவர் மன்னார் பொலிஸில் முறையீடு செய்துள்ளார்.

மன்னார்பொலிஸார் இது தொடர்பில் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# சவால்!

கொழும்பு, ஜன.23

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு போட்டியிட அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க வாக்குறுதியளிக்குமாறு தாம் சவால் விடுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"பிணை முறிப்பத்திர ஆணைக்குழுவின் அறிக்கையில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அப்படியான ஒருவரை கட்சியில் வைத்திருப்பதற்கு எதிராக பிரதமர் நாட்டு மக்களுக்கு முன்னுதாரணத்தை வழங்க வேண்டும்.

ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வகித்து வருகிறார். இதனால், கட்சியின் செயற்குழுவை கூட்டி அவரைக் கட்சியில் இருந்து நீக்க பிரதமர் தயாராக இருக்கின்றாரா? தம்மைப் பற்றிய இரகசியங்களை வெளியிட்டு விடுவார் என்ற அச்சத்தின் காரணமாக பிரதமர், ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக செயற்பட மறுக்கிறார். முழு நாடும் இது தொடர்பாக அவதானித்து வருகிறது" எனவும் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இறந்து பிறந்தவர்களா இவர்கள்?

## ரவி கருணாநாயக்க கேள்வி

கொழும்பு,ஜன.23

"அரசாங்கத்தை அமைக்க அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டவர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தச் சிலர் முனைகிறார்கள்" என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வட கொழும்பு தொகுதியின் கொச்சிக்கடையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் அலுவலகம் ஒன்றை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

"மண்டியிட வைக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை எம்மிடம் ஒப்படைத்தனர். தோற்கடிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்திலேயே, எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர, மகிந்த அமரவீர, ஜோன் செனவிரட்ன ஆகியோர் அங்கம் வகித்தனர்.

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த இவர்கள் தற்போது என்ன கூறுகின்றனர்? எமக்கு கவலையாக உள்ளது. அரசாங்கத்தை உருவாக்க பாடுபட்டவர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த இவர்கள் முயற்சித்து வருகின்றனர். தயாசிறி தற்போது என்ன பேசுகிறார்.

அவர் மகிந்த ராஜபக்சவுடன் இருந்தவர். இறந்து பிறந்தவர் போல் தற்போது பேசுகிறார். நாங்கள் பயப்பட மாட்டோம் "எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# சனந்தான் தடுமாறும்; அரசியல்வாதியள் நிதானமா இருப்பினம்

பேப்பர் எங்கும் சுத்துமாத்துக் கதையாத்தான் கிடக்கு. ஒரே குறூப்பிலை உள்ளவங்கள் எல்லாரும் விசர் ஆஸ்பத்திரியிலை உள்ளாக்கள் கதைக்கிற மாதிரி மாறி மாறி புசத்திறாங்கள். சிவசக்தி ஆனந்தன் சொல்லுறார் இரண்டு கோடி வாங்கினவை, கை தூக்கிறதுக்காக எண்டு. சிறீதரன் சொல்லுறார் ஆவணத்தோடை புறூ பண்ணுங்கோ வெண்டு. மாவை சொல்லுறார் ஓம் வாங்கினனாங்கள்தான். வாங்கிச் சிலவழிச்சுப் போட்டன் எண்டு ஒரு லிஸ்ட் தந்திருக்கிறார். தான் ஆராருக்குக் குடுத்தனான் எண்டு. என்னெண்டாலும் மாவை ஒரு ஜென்ரில் மென்தான். வாங்கினதை வாங்கின தெண்டு ஒத்துக் கொண்டிட்டார். ஆனால் சிறிதரன்தான் புறூ பண்ணுங்கோ எண்டு அடம்பிடிச்சுக் கூட்டத்திலை கத்திறார். ஆனால் இரண்டு கோடி தரேல்லை. இரண்டு கோடி எண்டது பொய். வழமையா ஒரு கோடிதான் தாறவை எண்டும் இடைக்கிடை கூட்டத்திலை புசத்திறார். என்னெண்டாலும் சிறிதரன் பேசுறது விசர்க்கதை. சிவசக்தி ஆனந்தன் சொல்லுற மாதிரிக் கை உயர்த்தத்தான் உந்தக் காசைக் குடுத்தவை எண்டால் என்னெண்டு புறூ பண்ணிறது. லஞ்சத்தை ஆரேன் புறூ பண்ணேலுமே. அதுகும் இப்பிடிப்பட்ட லஞ்சத்தை சீசீரிவி கமெரா இல்லாத இடமாப் பாத்து, லயிற்றை நூத்துப்போட்டெல்லே குடுத்திருப்பினம். குடுத்தவை எண்டு சொல்லுறவை எவ்வளவு கைதேர்ந்தவை. அதை விட வாங்கினவையும் படுகெட்டியள். அப்ப உதை எப்பிடி ஆவணத்தோடை புறூ பண்ணிறது? உது சிறிதரனுக்கு வடிவாத் தெரியும். அவர் பேசேக்க அடிக்கடி சொல்லுற வார்த்தை மக்களை ஏமாத்தாதையுங்கோ எண்டு. இப்ப ஆர் மக்களை ஏமாத்திறது? உதைக் கேக்கிறவை எல்லாம் காதிலை பூக் கந்தசாமி எண்டதுதான் சிறிதரனின்ரை நினைப்பு. உதை நம்பாதையுங்கோ எண்டு சொல்லுற ஆக்கள் நம்பவேண்டாம் எண்டு சொல்லுறதைவிட, ஏன் உந்தக் கதை வந்தது எண்டு யோசிக்கட்டும். நெருப்பில்லாமல் புகையாது பாருங்கோ.

ஆரோ என்னத்தையோ வாங்கிப் போட்டாங்கள் எண்டதிலை மட்டும் எனக்கு ஐயுறவாக்கிடக்கு. இதுக்கை மகிந்தாவும் நக்கலடிச்சிருக்கிறார். கூட்டமைப்பு எதிர்க்கட்சியா இருக்கத் தகுதியில்லாததெண்ட மாதிரி. அது எங்களுக்கு எப்பவோ விளங்கிவிட்டுது. ஆனால் மகிந்தாவுக்கு இப்பதான் விளங்கிது. மகிந்தா ஒரு ரியூப் லைட். சிலதை விளங்க அவருக்கு நேரம் எடுக்கிது.

கூட்டமைப்புக்கு இப்ப காலம் கூடாதெண்டு நினைக்கிறன். சுமந்திரனை அனுப்பினவை போய் உலகமெல்லாம் ஒருக்காச் சுத்தி தமிழ் கூட்டமைப்புச் செய்யிறது சரி எண்டு சொல்லச் சொல்லி. அவர் போன இடத்திலை லண்டனிலை பெருங்குழப்பமாப்போச்சுது. லண்டனை விட்டிட்டுக் காய் இப்ப கனடாவுக்கு ஓடிப்போயிட்டுதாம். இனி கனடாவும் கலைச்சால் எங்கை போவர் எண்டு தெரியேல்லை.

தன்ரை ஆக்களையே காட்டிக் குடுக்கக் கை நீட்டிக் காசு வேண்டின எல்லாம் இப்ப விசர் நாயள் மாதிரி நிம்மதி இல்லாமல் அலையிதுகள். உந்தத் துரோகத்தை ஆர் சரித்திரமா எழுதப்போயினமோ தெரியாது. கம்பன் இருந்தாலும் உதை எழுதேலாது. அப்பிடிப்பட்ட நீளமான ஒரு துரோக காவியம் இது.

இப்ப எங்களைச் சுத்தி மனுசர் வடிவத்திலை நாய், பேய், பிசாசு, மோகினி, பாம்பு, தேள், மயிர்க்குட்டியள் எண்டு எல்லாம் திரியிதுகள். இதுவரை இல்லாத உச்சகட்ட துரோகத்தை எங்கடை ஆக்களே எங்களுக்குச் செய்து கொண்டிருக்கிற காலம்.

இப்ப எல்லாரும் தாங்கள் அதி கூடின புத்திசாலியள் எண்ட நினைப்பிலைதான் கேம் விளையாடினம். எவ்வளவு அடிமட்டம் வரை போய் கேவலமா நடக்க முடியுமோ அவ்வளவு கேவலமா நடக்கினம். ஆகலும் தமிழ் அரசியல் கிறிஸ் கெட்டதாப் போச்சிது. ஒரு சதத்துக்கு உதவாதது போய்விட்டதைப் பாக்கத் தெரியிது. எத்தினை பேரை அவையள் வீட்டை போய் மண்டாடிக் கும்பிட்டு வோட்டுக் கேக்க வைச்சிருக்கினம். நல்லது எது? கெட்டது எது? எண்டு தெரியாததாச் சனந்தான் தடுமாறப் போகுது.

**- வில்லங்கம் விநாசி**

# சிவசக்தி எம்.பிக்கு சிக்கல் ஒரு மாதத்தில் தெரியவரும்

## புதிர் விடுகிறார் சரவணபவன் எம்.பி.




யாழ்ப்பாணம், ஜன. 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலை போய்விட்டனர் என விமர்சித்த சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அந்தச் சிக்கல்கள் என்ன என்பது பற்றி இன்னும் ஒரு மாதத்தில் தெரியவரும் எனப் புதிர் விட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் தனித் தனிக் குழுக்களாக செயற்பட்டு வருகின்றது. நாடாளுமன்றத்தில் செயற்பட்டு வருவதாலேயே நாங்கள் இதுவரை உண்மைகளை வெளிப்படுத்தவில்லை. இனியும் அவ்வாறு இருக்க முடியாது. எனவே ஊடக சந்திப்புகளை நடத்தவுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வட மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பானது 80 வீதமான வாக்குகளைப் பெற வேண்டும். அதனூடாகவே முழுமையான பலத்தைப் பெற்று பல்வேறு செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க முடியும். ஏனெனில் முன்னெப்போதும் இல்லாத வகையில் போட்டி நிலைமை, தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் காணப்பட்டது. ஆனால் முன்னர் இருந்த போட்டி நிலைமைகள் தற்போது இல்லை. ஏனெனில் வேறு கட்சிகளுக்குச் சென்றவர்களும் தற்போது எம்மோடு வந்த இணைந்துள்ளனர்.

அரசியல் தீர்விற்கு ஒரு குழுவொன்று எமது கட்சியில் செயற்பட்டு வருகின்ற அதே நேரத்தில் அபிவிருத்திக்கும் ஒரு குழு செயற்படுகின்றது. அவ்வாறு அபிவிருத்திக்குச் செயற்படுகின்ற குழுவானது தாம் செய்கின்ற விடயங்களை பெரிதாக வெளியில் சொல்வதில்லை. ஆகையால்தான் பல்வேறு கருத்துக்களை பலரும் வெளியிடுகின்றனர். இதனால் இதுவரைகாலமும் ஊடக சந்திப்புக்களை நடத்துவதில்லை என்று இருந்த நான் இனி ஊடக சந்திப்புகளை நடத்த வேண்டுமென்ற நிலைக்கு வந்துள்ளேன்.

நாடாளுமன்றில் எங்கள் எல்லோருக்கும் 2 கோடி ரூபா கிடைத்தது. அதை நாங்கள் அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்மொழிந்து கொடுத்திருந்தோம். இதற்கான வேலைகளும் நடைபெற்று வருகின்றன. இதனையே சிலர் விமர்சிக்கின்றனர். இத்தகைய கருத்துக்களால் சிவசக்தி ஆனந்தன் எம்.பிக்கு தற்போது சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன - எமக்கு அல்ல. அந்தச் சிக்கல்கள் என்ன என்பது பற்றி ஊடகவியியலாளர்களான நீங்களே போடுவீர்கள் - என்றார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




# பல்கலை. மாணவர் மோதல் நால்வருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் நால்வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துபீட 3 ஆம் வருட சிங்கள மாணவர்களே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு பல்கலைக்கழகத்துக்கு அண்மையாக பரமேஸ்வரா சந்தியில் அதே பீடத்தைச் சேர்ந்த 4 ஆம் வருட மாணவர்கள் இருவரைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டிலேயே நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். விசாரணை நடத்திய பொலிஸார் 3 ஆம் வருட மாணவர்கள் நால்வரைக் கைது செய்தனர். இவர்களை நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

மாணவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். ஆயினும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையேயான மோதல்கள் தற்போது அதிகரித்து வருவதால், விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் 4 மாணவர்களையும் வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.(ச)

## தொடர்ச்சிகள்

### மண் எண்ணெய்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணெய் என இரண்டு ரகங்களில் விநியோகிக்கப்படுகிறது.

இதில் இலங்கை மண் எண்ணெய் என்பது சிவப்பு நிறத்தில் பொதுப் பயன்பாட்டுக்கென அரசாங்க மானியத்தின் கீழ் விநியோகிக்கப்படுகிறது. குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கும், மீனவ மக்களுக்கும் பொருளாதார நிவாரணங்களை வழங்குவதற்காக லீற்றர் ஒன்றுக்கு 30 ரூபா நட்டத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சிவப்பு மண் எண்ணெய்யை விநியோகிக்கிறது.

கடந்த சில மாதங்களில் இலங்கையில் மண் எண்ணெயின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சில நிரப்பு நிலையங்களில் விநியோகஸ்தர்கள் கூடுதல் இலாபத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில், இலங்கை மண் எண்ணெயைக் கூடுதலாகப் பெற்றுக் கொண்டுள்ளனர். இதனால், பஸ் வண்டிகளுக்கும், பவுஸர்களுக்கும் மண்ணெண்ணெய் பயன்படுத்துவதோடு, டீசலுடன் மண் எண்ணெய் கலப்பதற்கும் வழிவகுத்துள்ளது. இது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

### தபால் வாக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக தகுதி பெற்றோரின் எண்ணிக்கை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம்" என்றும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மட் தெரிவித்துள்ளார். (அ)

### சிறுமியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குட்பட்ட நாச்சிக்குடா வலைப்பாடு என்ற இடத்தில் 12 வயதுச் சிறுமியை பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று வன்புணர்ந்த சம்பவம் இடம்பெற்றது. சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது மைத்துனன் உறவு முறைகொண்ட குடும்பத்தலைவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நடாத்தப்பட்டு, சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வழக்குப் பாரப்படுத்தப்பட்டது. சந்தேகநபரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றமை மற்றும் 16 வயதுக்குட்பட்ட சிறுமியை வன்புணர்ந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை சந்தேகநபருக்கு எதிராக முன்வைத்து சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. எதிரியும், பாதிக்கப்பட்ட தரப்பினரும் மன்றில் முன்னிலையாகினர்.

"எதிரி தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்கின்றார். மதுபோதையில் அவ்வாறு நடந்துகொண்டமைக்கு இப்போது வருத்தப்படுகிறார். அவருக்கு குறைந்த பட்ச தண்டனையை வழங்கி மன்று விடுவிக்கவேண்டும்" என்று எதிரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்தார்.

"எதிரி தனது குற்றத்தை தானாக முன்வந்து ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு உச்சபட்சதண்டனையை மன்று வழங்கவேண்டும்" என்று வழக்குத் தொடுநரான அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

"எதிரி குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அவரது முதலாவது குற்றமான பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து சிறுமியைக் கடத்திச் சென்றமைக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது: அத்துடன், 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இரண்டாவது குற்றமான சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்கு எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டப் பணமாக 5 ஆயிரம் ரூபாவை செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் மேலும் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக 2 இலட்சம் ரூபா பணத்தை வழங்கவேண்டும்.

எதிரி இரண்டு வகை சிறைத் தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்கவேண்டும்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (அ)

### தமிழரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதற்கும் நீங்கள் யாவரும் முன்வரவேண்டும். நீங்கள் அவற்றைப் பகிரங்கமாகக் கூறுவது உங்களின் கடமைகளை அல்லது எதிர்காலத்தைப் பாதிக்கும் எனக் கருதுவீர்களாயின் அவ் விடயங்களை எம்மிடம் எடுத்துக் கூறுங்கள். நாம் அவற்றை மத்திய அரசிற்கும் உலக நாடுகளுக்கும் மற்றும் உதவி புரியக் கூடிய நாடுகளுக்கும் எடுத்துக்கூறி விமோசனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிக்க தயாராகவுள்ளோம்.

- இப்படி அதிகாரிகள் முன்னிலையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பிரதம செயலர் அலுவலகம் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), திறைசேரியின் புதிய அலுவலக திறப்பு விழா நேற்று கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே கூரையின் கீழ் அலுவலகங்கள் இல்லாது ஒவ்வொரு இடத்தில் இயங்கியதால், கடிதப் போக்குவரத்தில் வீணே காலம் கழிந்தது. இதற்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபை நிர்வாக முறை முன்னரே அறிமுகமானலும் வடக்கில் நிலவிய குழப்ப நிலையால் ஆளுநர்களின் நேரடிக் கண்காணிப்பிலேயே எமது உத்தியோகத்தர்கள் வேலை பார்த்தனர். 2013 இல் மக்கள் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் மாகாணம் இயங்கத் தொடங்கியது. ஆனாலும் அரச உத்தியோகத்தர்கள் தமது பழக்கத்தின் நிமித்தம் ஆளுநரின் கீழேயே இயங்கியதால் நிர்வாகத்தை நகர்த்திச் செல்வது பெரும் சவாலானது.

மக்களுக்கு வேண்டிய உதவிகளை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் செய்யவேண்டும். உதவி நாடி வரும் மக்களை ஒருபோதும் திருப்பி அனுப்பாதீர்கள். அப்படி அவர்களை திருப்பி அனுப்ப வேண்டிய சூழல் ஏற்பட்டால் அவர்கள் பயணிக்க வேண்டிய தூரம், அவர்களின் நிதி நிலைமை பற்றியும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள். அவர்களுக்கு தேவையான உதவிகளை இயன்றவரை செய்யுங்கள். முதலமைச்சர், முதன்மைச் செயலாளர் செயலகங்கள் என்று பாராது வேற்றுமையில் ஒற்றுமை காணும் விதத்தில் மக்கள் சேவைச் செயலகமாகக் கடமையாற்ற முன்வருவோமாக! வட மாகாண சபை இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரு முன்மாதிரியான சபையாக ஏற்கனவே சில விடயங்களில் தனது தனித்துவத்தைக் காட்டியுள்ளது. மேலும் நாம் எமது சேவையையும் செயற்றிறனையும் மேம்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் - என்றார்.

### தேர்தலுக்குப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து வேறு கட்சியில் போட்டியிடுகின்ற போதிலும் மக்கள் சுதந்திரக் கட்சியை விட்டுப் பிரியவில்லை. மகிந்தவின் கட்சியை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள்.

இதனால் உண்மையான போட்டி சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில்தான் உள்ளது. ஜீ.எஸ். பீரிஸ் மற்றும் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட ஓரிருவரைத் தவிர வேறு எவரும் மகிந்தவின் கட்சியில் உறுப்புரிமையைப் பெறவில்லை. சும்மாதான் ஒட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். அந்தக் கட்சி வெற்றிபெறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லாமையே இதற்குக் காரணம்.

தேர்தல் முடிந்ததும் நினைத்துப் பார்க்க முடியாத பலர் மஹிந்த தரப்பில் இருந்து மைத்திரி தரப்புக்குத் தாவவுள்ளனர். ஏற்கனவே உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் இருந்து பலர் எம்முடன் இணைந்துள்ளனர். தேர்தல் முடிந்ததும் இன்னும் இணைவர். பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கலாம். தேர்தல் முடிந்ததும் பொருளாதார ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்படும்" -என்றார். (அ)



# சிரியாவுக்குள் அதிரடியாக நுழைந்தது துருக்கி

சிரியா,ஜன.23

சிரியாவில் உள்ள குர்திஷ் இராணுவக் குழுவை வெளியேற்றுவதற்காக, துருக்கியின் தரைப்படை துருப்புக்கள் வடக்கு சிரியாவுக்குள் அதிரடியாக நுழைந்தன.

'வைஜிபி' என்று அறியப்படும் குர்திஷ் குழு, துருக்கியின் தென் எல்லையில் இருக்கும் அஃப்ரின் பிராந்தியத்தில் இயங்கி வருகின்றது.

சிரியாவில் ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான சண்டையில் ஈடுபடும் அமெரிக்க ஆதரவுக் கூட்டணியில், குர்திஷ் இராணுவக் குழு முக்கிய பகுதியாக உள்ளது.

தடை செய்யப்பட்ட குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியுடன், குர்திஷ் இராணுவக் குழுவுக்கு தொடர்புள்ளது என துருக்கி நம்புகிறது.

எனவே அஃப்ரின் பிராந்தியத்தில் இருந்து குர்திஷ் இராணுவக் குழுவை வெளியேற்றும் நோக்கத்துடன் துருக்கி இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

துருக்கியின் படைகளுடன், 'ஃப்ரீ சிரியன் ஆர்மி' என்ற துருக்கி ஆதரவு அமைப்பின் போராளிகளும் இந்த நடவடிக்கையில் இணைந்துகொண்டனர்.

சுமார் 25,000 போராளிகள், துருக்கி ராணுவத்துடன் இணைந்து தாக்குதல் நடத்தியதாகத் தளபதி மேஜர் யாசர் அப்துல் ரஹிம் கூறியுள்ளார்.

ஆயினும் தனது பகுதியில் இருந்து துருக்கிப் படைகளை விரட்டியதாகக் கூறும் குர்திஷ் குழு, இதற்குப் பதிலடியாக துருக்கி எல்லைப் பகுதியில் ரொக்கெட் தாக்குதலைத் தாம் நடத்தியதாகவும் கூறியுள்ளது. (அ)

# பாவனாவுக்கு நேற்று தாலிகட்டு!



சென்னை, ஜன.23

நடிகை பாவனாவுக்கும் அவரது காதலரான கன்னடத் திரைப்படத் தயாரிப்பாளர் நவீனுக்கும் திருச்சூரில் நேற்றுத் திருமணம் நடந்தது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் பாவனா - நவீன் திருமண நிச்சயதார்த்தம் மிகவும் எளிமையாக நடந்தது. இதைத் தொடர்ந்து திருச்சூரில் உள்ள திருவம்பாடி ஆலயத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடிகை பாவனா - நவீன் திருமணம் நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பலர் ஆர்வமாக இருந்தாலும் மிகமுக்கிய உறவினர்கள், குடும்ப நண்பர்கள், திரையுலகினரை மட்டுமே தனது திருமணத்துக்கு நடிகை பாவனா அழைத்திருந்ததால் அவர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். பாவனாவின் தோழி நடிகை ரம்யாநம்பீசன், பாடகி சயனோரா ஆகியோர் திருமண நிகழ்ச்சியில் முக்கிய பங்கேற்றனர். (அ)

# மீண்டும் 'சுசிலீக்ஸ்'

சென்னை, ஜன.23

பின்னணிப் பாடகி சுசித்ராவின் ருவிட்டர் பக்கத்தில் மீண்டும் ஆபாசப் புகைப் படங்கள் மற்றும் வீடியோக்கள் வெளியாவதால் நடிகைகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

திரைப்படப் பின்னணி பாடகி சுசித்ராவின் ருவிட்டர் பக்கத்தில் கடந்த ஆண்டு நடிகர், நடிகைகளின் அந்தரங்கப் படங்கள், வீடியோக்கள் வெளியாகின.

தமிழ்த் திரைப்பட நடிகர், நடிகைகள், பாடகியின் அந்தரங்கப் படங்களும், வீடியோக்களும் தொடர்ந்து வெளியானதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

"பாடகி சுசித்ரா மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார். சிலர் இதைப் பயன்படுத்தி அவருடைய ருவிட்டர் பக்கத்தில் ஆபாசப் படங்களையும், வீடியோக்களையும் வெளியிட்டு விட்டார்கள்" என்று கூறப்பட்டது. இது தொடர்பாக சுசித்ராவும், அவருடைய கணவர் கார்த்திக்கும் பொலிஸில் புகார் செய்தனர். நடந்த சம்பவத்துக்கு வருத்தமும் தெரிவித்தனர். சுசிலீக்ஸ் வீடியோ படங்களும் ஓய்ந்ததால் தமிழ்ப் பட உலகினர் நிம்மதி அடைந்தனர்.

இந்த நிலையில் நேற்று பாடகி சுசித்ரா பெயரில் உள்ள ஒரு ருவிட்டர் பக்கத்தில் 'ஓராண்டு நிறைவு' என்ற குறிப்புடன் நடிகைகள் பெயரில் அடுத்தடுத்து வீடியோக்



கள் வெளியாகின.

'கபாலி' படத்தில் ரஜினி பேசும் 'வந்துட்டேன்னு சொல்லு திரும்பி வந்துட்டேன்னு சொல்லு. எப்படி போனேனோ அப்படியே திரும்ப வந்துடேன்னு சொல்லு' என்ற 'பஞ்ச்' வசனம் ஒலிக்க பெண்களின் குளியல் காட்சிகள் வெளியாகின.

தொடர்ந்து பிரபல நடிகைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, 'எந்த நடிகையின் வீடியோ வேண்டும்' என்ற கருத்துக் கணிப்பும் நடத்தப்பட்டது. இதனால் நடிகைகளிடையே மிகுந்த கலக்கம் ஏற்பட்டுள்ளது. (அ)

# 5 வயதுச் சிறுவனின் வெடிகுண்டு மிரட்டல்



கலிபோர்னியா, ஜன.23

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஐந்து வயது சிறுவன் ஒருவன் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தான் எனக் கூறி பாடசாலையிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளான்.

ஆரம்பப்பிரிவில் கற்கும் சிறுவன் ஒருவனை அவனது ஆசிரியர் புத்தகப் பையை கீழே இறக்கி வைக்கும்படிக் கூறியுள்ளார்.

மறுத்த அவன், பையைக் கழற்றினால் அதனுள் வைக்கப்பட்டுள்ள குண்டு வெடித்துவிடும் என்று கூறியுள்ளான்.

உடனடியாக அவனது தந்தைக்குத் தகவல் தெரிவித்த பாடசாலை நிர்வாகம் அவன் ஒரு நாள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளான் எனவும் அவனை வந்து அழைத்துச் செல்லுமாறும் கூறியுள்ளது.

பாடசாலைக்கு வந்த சிறுவனின் தந்தை, மகன் இடை நீக்கம் செய்யப்படுவதற்கான காரணத்தைக் கேட்டுள்ளார்.

சட்டப்படி அப்படித்தான் செய்ய முடியும் என்று கூறிய பாடசாலை நிர்வாகம் அவன் வேண்டுமென்றே மிரட்டல் விடுத்தான் எனத் தெரிவித்தது. பின்னர் சிறுவன் தீவிரவாத மிரட்டல் விடுத்ததாக மாற்றிக் கூறிய பள்ளி அவனது தவறை நிரந்தரக் கறுப்புப் புள்ளியாக பதிவு செய்துள்ளது. அவ்வாறு பதிவு செய்துள்ளதை நீக்க விரும்பும் சிறுவனின் பெற்றோர், அவன் வெடிகுண்டு என்று கூறியது தவறுதான் என்றாலும் அவனை நாங்கள் கடிந்துகொள்ளவில்லை என்று தெரிவித்தனர். (அ)

# அகதிகளுக்குத் தடை!

பேர்லின், ஜன.23

ஜேர்மனியின் கோட்பஸ் நகரில் உள்ள அகதிகளால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதால், புதிதாக அகதிகள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நகரில், அகதிகளினால் பொதுமக்களுக்குத் தொந்தரவு அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதற்கு உதாரணமாக இந்த வாரத்தின் தொடக்கத்தில், ஜேர்மனியச் சிறுவன் ஒருவனை கத்தியைக் கொண்டு தாக்கினர் என, இரண்டு சிரிய அகதிச் சிறுவர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் நடைபெற்ற சில நாட்களிலேயே, 14 முதல் 17 வயதுடைய சிரியாவைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள், ஒரு தம்பதியரை வணிக வீதியில் தாக்கினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்களை கருத்தில் கொண்டு, நகரின் மையப் பகுதியில் உள்ள சதுக்கத்தில் வீடியோ கமெராக்கள் பொருத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பாதுகாப்பு காரணங்களுக்காக புதிதாக அகதிகளுக்கு, கோட்பஸ் நகரில் நுழையத் 'தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த தடை உத்தரவானது இன்னும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வைரமுத்துவின் வீடு தொடர் முற்றுகை



சென்னை, ஜன.23

கவிஞர் வைரமுத்துவின் வீட்டை முற்றுகையிட முயன்ற இந்து அமைப்பினரை பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

ஆண்டாள் குறித்து கவிஞர் வைரமுத்து எழுதிய கட்டுரையில் அவதூறான கருத்துகளைத் தெரிவித்துள்ளனர் எனக் கூறி இந்து அமைப்பினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் அகில பாரத இந்து மகா சபையைச் சேர்ந்தவர்கள் சென்னை பெசன்ட் நகரில் உள்ள வைரமுத்துவின் வீட்டை நேற்று முற்றுகையிட முயன்றனர். ஆனால் பொலிஸார் அவர்களைத் தெரு முனையில் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து, வைரமுத்துவுக்கு எதிராக கோஷமிட்ட அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

அதேபோல் நேற்று பிற்பகலில் இந்து மக்கள் கட்சி மற்றும் அனுமன் சேனா அமைப்பைச் சேர்ந்த 50 பெண்கள் உட்பட சுமார் 100 பேர் வைரமுத்துவின் வீட்டை முற்றுகையிட முயன்றனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர். (அ)

# ஜெயலலிதாவுக்கு கனிமொழி புகழாரம்

சென்னை, ஜன.23

"ஜெயலலிதாவோடு மாறுபட்ட கருத்து இருந்தாலும், பல நேரங்களில் தமிழகத்தின் உரிமையை அவர் விட்டுக் கொடுத்ததில்லை" என கனிமொழி எம்.பி. கூறியுள்ளார்.

"2-ஜி அலைக்கற்றை வழக்குப் பொய்யாக புனையப்பட்ட வழக்கு. பொய்யான வழக்கில் குற்றத்தை நிரூபிக்க முடியாததால், நீதிபதி எங்களை விடுதலை செய்தார்.

தமிழகம் தற்போது அதலபாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. தமிழகத்தில் நகைச்சுவை ஆட்சி நடக்கிறது. ஜெயலலிதாவோடு மாறுபட்ட கருத்து இருந்தாலும், பல நேரங்களில் தமிழகத்தின் உரிமையை அவர் விட்டுக்கொடுத்தது இல்லை. ஆனால் இன்று ஆட்சியில் இருப்பவர்கள் தமிழகத்தின் அனைத்து உரிமைகளையும் தாரை வார்த்து கொடுக்கிறார்கள்.

67 சதவீதம் பேருந்து கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள். பல தவறுகளை அரசு செய்துகொண்டு மக்கள் மீது சுமையை சுமத்தி இருக்கிறது. ஜி.எஸ்.டி., பண மதிப்பு நீக்கம் ஆகிய நடவடிக்கைகளால் பல தொழிற்சாலைகள் இன்றைக்கும் திருப்பூரில் மூடக்கூடிய சூழல் உருவாகி வருகிறது. நாம் யார் என புரிந்து கொண்டால் தான், அது தமிழகத்துக்கான விடியலாக இருக்கும்" என்றார். (அ)

# மகிழ்ச்சி!



சென்னை, ஜன,23

மேற்கிந்தியத் தீவுக்ள் அணியின் சகலதுறை வீரர் வெய்ன் பிராவோ, ஐ.பி. எல். தொடரில் டோனியின் தலைமையின் கீழ் விளையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

வெய்ன் பிராவோ, ஐ.பி.எல். தொடரில் முதலில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். அதன் பிறகு, மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடினார்.

தற்போது, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தடைக்காலம் முடிந்து, இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் விளையாட உள்ளது. இந்நிலையில், பிராவோ மீண்டும் சென்னை அணியில் விளையாட உள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ' சென்னை அ்ணியில் ஐந்து ஆண்டுகள் நான் ரசித்து விளையாடினேன். அது தான் ஐ.பி.எல். தொடரில் எனது சிறந்த காலகட்டமாகும். தற்போது நான் முன்பை விட, அதிக அளவு முதிர்ச்சியடைந்துள்ளேன். டோனி, விளையாட்டை புரிந்துகொள்வதற்கான வழிமுறை எனக்குக் கற்றுத் தந்தார். குறிப்பாக, ரி-20 போட்டிகளைப் புரிந்துகொள்ள உதவினார். டோனியைப் போல ஒரு வீரர் அணியில் இடம் பெறுவது மிகவும் சிறந்தது. ஏனெனில், விளையாட்டின் போது ஏற்படும் அழுத்தத்தைக் குறைப்பதற்கான தன்மை அவரிடம் உள்ளது. அவரிடம் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது.

என்னுடைய பந்து வீசும் திறன் மீதும், ஆட்டத்தை முடிக்கும் திறன் மீதும், டோனிக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. எனவே, அவரின் தலைமையின் கீழ் மீண்டும் விளையாடுவதில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.(அ)

# ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி

நெதர்லாந்து, ஜன.23

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் சதுரங்கப் போட்டியின் 7 ஆவது சுற்றில் இந்தியாவின் கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

நெதர்லாந்தின் விஜ்க் ஆன் ஜீ நகரில் இந்தப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற 7 ஆவது சுற்றில் விஸ்வநாதன் ஆனந்த், ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக்கை எதிர்த்து விளையாடினார்.

இதில் சிறப்பாக ஆடிய கிராம்னிக், ஆனந்தை வீழ்த்தினார். 36 நகர்த்தல்களில் ஆட்டம் முடிந்தது. ஆனந்த் தற்போது 4 புள்ளிகளைப் பெற்று 6 ஆவது இடத்தில் இருக்கிறார்.(அ)



# பெடரர் உள்ளே! ஜோகோவிக் வெளியே!!

சிட்னி, ஜன.23

அவுஸ்திரேலியா பகிரங்க டென்னிஸ் தொடரில் காலிறுதிக்கு ரோஜர் பெடரர், பெர்டிச் ஆகியோர் முன்னேற்றம் அடைந்துள்ளனர். முன்னணி வீரரான ஜோகோவிக் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் 17ஆம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச், கொரியாவின் ஹியியோன் சங்கை எதிர்கொண்டார். தரநிலை பெறாத கொரிய வீரர் சங், ஜோகோவிச்சுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். ஜோகோவிச்சால் சங்கின் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் 7 - 6, 7-4, 7-6 என ஜோகோவிக்கை வீழ்த்தி காலிறுதிக்கு சங் முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 5 ஆம் நிலை வீரரான ஒஸ்திரியாவின் டொமினிக் தியம் அமெரிக்காவின் டெனிஸ் சான்ட்கிரெனை எதிர்கொண்டார். இந்த ஆட்டம் நீண்ட நேரம் சென்றது. ஐந்து செட் வரை நீண்டதில், தியம் 2-3 எனத் தோல்வியடைந்து வெளியேறினார்.

3 ஆவது ஆட்டத்தில் 2 ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர், ஹங்கேரியின் மார்டன் புக்சோவிக்ஸை எதிர்கொண்டார். இதில் ரோஜர் பெடரர் 6-4, 7 - 6, 6-2 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

கடைசி ஆட்டத்தில் 19ஆம் நிலை வீரரான செக் குடியரசின் தாமஸ் பெர்டிச், 25ஆம் நிலை வீரரான இத்தாலியின் பேபியோ போக்னினியை எதிர்கொண்டார். இதில் பெர்டிச் 6-1, 6-4, 6-4 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் டிமிட்ரோவ் - எட்மண்ட், ரபெல் நடால் - சிலிக் ஆகியோர் பலப்பரீட்சை நடத்துகிறார்கள். நாளை , ரோஜர் பெடரர் - பெர்டிச், டெனிஸ் சான்ட்கிரென் - சங் ஆகியோர் மோதவுள்ளனர். (அ)

# மீண்டும் அடி!



வெலிங்டன், ஜன.23

நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட 'ரி-20' சர்வதேசப் போட்டித் தொடரில், வெலிங்டனில் நேற்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் 7 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து வென்றுள்ளது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், பாபர் அஸாம் 41, ஹஸன் அலி 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில், டிம் சௌதி, செத் றான்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் மிற்செல் சான்ட்னெர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 106 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, 15.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், கொலின் மன்றோ ஆட்டமிழக்காமல் (49), டொம்ப்ஷரூஸ் 26, றோஸ் டெய்லர் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில், ருமான் றயீஸ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக கொலின் மன்றோ தெரிவானார். (அ)


ஊடகவியலாளராக

ஆசையா?



தகுதிகள்:

- தமிழில் ஓரளவு தேர்ச்சி
- ஊடகத்துறையில் ஆர்வம்
- முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ethirolimedia@gmail.com

021 224 38 18
021 300 48 48


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 23.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.